**றுஹுணு பல்கலைக்கழகம் - 2015**

---

றுஹுணு பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, றுஹுண பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புலமைப்பரிசில் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட 09 சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2,970,929 கூட்டுத்தொகை நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நெடுங்கால முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) மூலதனச் சொத்துக்களை நிர்மாணித்தல் மற்றும் கொள்வனவு செய்வதற்காக பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 153,236,034 தொகை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மீளளிப்புச் செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியவையாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(iii) நியமங்களின் மூலம் தேவைப்படும், அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றைத் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படக் கூடாதெனினும், பல்கலைக்கழகத்தினால் மூலதனச் செலவினத்திற்கென வழங்கிய ரூபா 153,236,034 செலவிடப்படாது மூலதன மானியக் கணக்கில் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படாமையால் ரூபா 50,587,750 எதிர்மறை மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,536,204 ஆகவிருந்த எஞ்சிய பாராமரிப்புப் பொருட் கையிருப்பு, பாராமரிப்பு நடவடிக்கைகளுக்கெனப் பேணப்பட்ட பொருட் கையிருப்பாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாண வேலைகள் முடிவடைந்து பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 234,043,340 கிரயமான 06 கட்டிடங்களது பெறுமதி கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்படாது தொடர்ந்தும் நடைபெறும் வேலைக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அதனால் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை பெறுமானத்தேய்விலும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமப் பண்ணையில் விற்பனைக்காகவிருந்த ரூபா 239,290 தொகையான கன்றுகளது கையிருப்புப் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(இ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் பொருட்டு மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் பொருட்டும் செலுத்த வேண்டிய ரூபா 869,224 தீர்வை வரி மற்றும் தண்டப் பணம் என்பன கணக்கிலிடப்படவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொறியியல் பீடத்திற்குரிய நன்கொடை மற்றும் பரிசுக் கணக்கு மீதியை அதனோடு தொடர்புடைய பட்டோலையுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 432,408 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

மீளாய்வாண்டிற்காக 2016 மார்ச் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட 92 கணக்காய்வு ஐய வினாக்களில் ரூபா 872,232,218 பெறுமதியான 25 கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய பதில்கள் 2016 ஜுன் 30 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளும் பிணை முறிகளும் மீறப்பட்டமையால் 01 முதல் 15 ஆண்டுகள் வரையான காலப் பகுதியின் போது 20 விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 27,078,578 கூட்டுத்தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 முதல் 07 ஆண்டுகள் வரையான ரூபா 1,466,849 கூட்டுத்தொகையுடைய ஆராய்ச்சி மற்றும் வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வழங்கப்பட்ட முற்பணமானது 2016 ஜுன் 30 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தினது 3.1 மற்றம் 3.2 ஆம் பிரிவுகள் | கல்விசார் பதவியணி உத்தியோகத்தர்கள் 478 பேரிடமிருந்து பணிப்பொறுப்பு ஒப்படைப்பு அடிப்படையில் சேவை புரியும் இரண்டு விரிவுரையாளர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்தாது மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக முறையே ரூபா 1,105,134,777 மற்றும் ரூபா 1,415,806 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டில் நிகழ்ந்த இரு வாகன விபத்துக்களுக்கான ரூபா 322,290 இழப்பு சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | |
| (i) 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | உடன்படிக்கை மீறிய நபர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 41,896,466 நிலையான வைப்புக்களிலோ அல்லது திறைசேரி உண்டியலிலோ முதலீடு செய்யப்படவில்லை. முன்னைய ஆண்டில் அவ்வாறாக முதலீடு செய்யப்பட்ட தொகையின் மூலம் பெறப்பட்ட ரூபா 1,283,507 வட்டியானது சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு முரணாக பிற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2015 செப்டம்பர் 18 ஆந் திகதிய 13/2015 ஆம் இலக்கச் சுற்றிக்கை | பீடாதிபதிகளுக்குப் போக்குவரத்து வசதிகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் 140 லீட்டர் பெற்றோல் வரம்புக்கு அதிகமாக மானிட சாஸ்திர மற்றும் சமுதாய விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதிக்கு 678 லீட்டர் பெற்றோலுக்கு ரூபா 79,326 தொகை கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது |
| (ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) 1987 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 8,438,459,798 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக முறைப்படி நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்படவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கச் சுற்றிக்கை | மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு ரூபா 206,132,592 கிரயமுடைய கணனிகள் சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 28,852,186 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 42,347,533 ஆனமையால்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 13,495,347 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 434,088,733 ஆல் அதிகரித்த போதும், மொத்தச் செலவினம் ரூபா 447,584,080 இனால் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு அமைந்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டில் மிகை ஏற்பட்ட போதும், 2012, 2013 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையும் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் மீண்டும் மிகையும் ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2011 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டினது பங்களிப்பு குறைவடைந்திருந்த போதும், அதன் பின்னரான ஆண்டுகளில் கிரமமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,778,438,697 ஆகவிருந்த பங்களிப்பு 21 சதவீதம் அதிகரித்தது மீளாய்வாண்டின் போது ரூபா 2,155,374,403 ஆக இருந்தது.

## 3.2 பல்கலைக்கழகத்திற்கு எதிராக அல்லது பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட சட்டரீதியான நிகழ்வுகள்

மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தினால் உயர் நீதிமன்றத்திலும் மாவட்ட நீதிமன்றத்திலும் 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கொன்றில் ரூபா 5,760,894 அறவிடப்பட வேண்டியிருந்தது. பல்கலைகழகத்திற்கு எதிராக பல்வேறு நபர்களால் தொழில் நியாயச் சபையில் 13 புகார்கள், 09 நீதிமன்ற வழக்குகள் மற்றும் பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையில் 04 புகார்கள் என 26 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்திற்கு எதிராகக் தொடுக்கப்பட்ட இரு வழக்குகளில் ரூபா 28,905,977 தொகையான நட்டஈடு கோரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நிறுவகத்தின் நோக்கங்கள்

பல்கலைக்கழகத்தினால் 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்டிருந்த உபாய மார்க்கத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான நோக்கங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

(i) கல்வி, ஆராய்ச்சி மற்றும் சேவைகளுக்கான பொருட்டு நுழைவுகளை விரிவுபடுத்தல், தரத்தை அதிகரித்தல் மற்றும் தொடர்புடைய தன்மையை அபிவிருத்தி செய்தல்

(ii) ஆண் அல்லது பெண் பால், சமயம் மற்றம் இனவர்க்கம், அங்கவீனர்களுக்கான நியாயத்தையும் சரிநிகர் தன்மையையும் உறுதி செய்தல்

(iii) ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் வளங்களை முகாமைசெய்தலினூடாக நல்லாளுகையை மேம்படுத்தல்.

(iv) பல்கலைக்கழகங்களைத் தரப்படுத்தலில் முதல் 2000 பல்கலைக்கங்களுக்கிடையே வருதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தனித்துவத்தை மேம்படுத்தல்.

மேற்படி நோக்கத்தை ஈடேற்றுதல் தொடர்பான பரீசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014/2015 கல்வியாண்டிற்காக மாணவர்களை ஆட்சேர்க்கும் போது, 14 பட்டப் படிப்புக் கற்கை நெறிகளில் 11 இல் ஆட்சேர்க்கப்படக்கூடிய எண்ணிக்கையை விட 187 மாணவர்கள் குறைவாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) விஞ்ஞானபீடம்

----------------------

(i) கடந்த 5 கல்வி ஆண்டுகளின் போது விஞ்ஞான பீடத்தின் 3 பட்டப்படிப்புக் கற்கை நெறிகளில் சேர்த்துக்கொள்ளக்கூடிய மாணவர்களது எண்ணிக்கையை விட 551 பேர் குறைவாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ii) விஞ்ஞான பீடத்திற்கெனப் பதிவு செய்யப்பட்ட மாணாக்கர் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகிச் செல்லும் போக்கினை முன்னைய ஆண்டுகளில் காணக்கூடியதாக இருந்ததுடன், அதனைத் தவிர்ப்பதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்காமையால் 2014/2015 ஆம் கல்வியாண்டிலேயே 104 மாணவர்கள் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகிச் சென்றிருந்தனர்.

(iii) 2013 ஆம் ஆண்டின் போது தேசிய தரப்படுத்தல் பட்டியலில் 3 ஆம் இடத்திலிருந்து 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் முறையே 6 ஆம் மற்றும் 4 ஆம் இடங்கள் வரையும், எனவும் 2014 ஆம் ஆண்டின் போது உலக தரப்படுத்தல் பட்டியலில் 2353 ஆம் இடத்திலிருந்து 2015 ஆம் ஆண்டில் 3483 ஆம் இடம் வரையும் கீழிறங்கியிருந்தது. விஞ்ஞான பீடத்தில் பதிவு செய்த மாணவர்கள் வேறு பல்கலைகழகங்களுக்கு மாற்றலாகிச் செல்வதற்கு மேற்குறித்த காரணம் பிரதானமாக அமைந்திருக்கலாம் என்பது கணக்காய்வின் எண்ணமாகும்.

(iv) விஞ்ஞான பீடத்தின் மாணவர் இயலளவு 1270 பேராகிய போதும், 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 860 மாணவர்கள் மாத்திரம் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமையால் ஒரு மாணவரது கிரயம் ரூபா 112,091 இனால் அதிகரித்திருந்தது.

(இ) தொலைவு மற்றும் தொடர்ச்சியான கல்விக் கூறு

--------------------------------------------------------------------------------

(i) பட்டப்படிப்புக் கற்கை நெறிக்காக மாணவர் ஒருவர் பதிவு செய்து 03 கல்விசார் ஆண்டுகளினுள் தனது பட்டப் படிப்பை நிறைவு செய்ய வேண்டுமாயினும், 2010 மற்றும் 2009 ஆம் கல்வி ஆண்டுகளில் பதிவு செய்த மாணவர்களுக்கு தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு 06 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு காலத்தைக் கழித்திருந்ததுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் 05 முதல் 23 மாத காலத் தாமதமும் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கலை மானிப் பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கான 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரை பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3010 முதல் 892 வரை 70 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு முடிவு வரை போதியளவு எண்ணிக்கையிலான மாணவர்களை பதிவு செய்து கொள்வதற்குத் தவறியமையால் பதிவு செய்து கொள்ள வேண்டிய கால எல்லை காலவரையின்றி பின்போடப்பட்டிருந்தது.

(iii) கல்விசார் நடவடிக்கைகளில் வினைத்திறமையின்மை காரணமாக பரீட்சைகளை நடாத்துவதில் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க கால தாமதம் காரணமாக மாணவர்களை இக் கூறில் பதிவு செய்து கொள்வதில் குறைவு ஏற்படக் காரணமாக அமைந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது புதிய பட்டப்பட்டிப்புக் கற்கைநெறியை அறிமுகஞ் செய்தல், கரையோர வளங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிலையமொன்றினை ஸ்தாபித்தல் மற்றும் பல்கலைக்கழக கிராமப் புற நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றிக்குப் பெறப்பட்ட ரூபா 2,512.8 மில்லியன் நிதியேற்பாடு அந்த பணிகளுக்காக வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டு பணிகளை நிறைவேற்றுவதற்குப் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இயலாதிருந்தது.

(உ) நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான பல்வேறு செயற்பாடுகளை அமுலாக்கும் பொறுப்பு பீடாதிபதிகள் மற்றும் பகுதித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமோ அல்லது செயலாற்றல் அறிக்கையோ தயாரிக்கப்படாமையால் ஏனைய நோக்கங்களில் குறிப்பிடப்பட்ட பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எந்தளவு ஆற்றல் பெறப்பட்டது. போன்றவற்றைப் பரீசிலித்து அவற்றை உறுதி செய்வதற்குக் கணக்காய்வில் இயலாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்திற்குரிய சொத்துக்களுக்கு 2015 மற்றும் அதற்கு முன்னரான ஆண்டுகளின் பொருட்டுக் குறித்த காலப்பகுதிக்குள் தீர்வை வரி கொடுப்பனவு செய்யாமையால், மாத்தரை மாநகர சபைக்கு ரூபா 133,252 தண்டப் பணமாகக் கொடுப்பனவு செய்யவேண்டியேற்பட்டது.

(ஆ) அலுவலக இடவசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் புதிய நிர்வாகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு 2016 ஆம் ஆண்டில் வேலை முடிவடைய வேண்டிய போதும், 2016 மே 15 வரை அப் பணியை ஆரம்பிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையிலிருந்து நீங்கியிருந்த 5 விரிவுரையாளர்களிடமிருந்து கடனாகவும் முற்பணமாகவும் அறவிடப்பட வேண்டிய ரூபா 430,930 அறவிடப்படாது பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) சிங்களக் கல்விப் பிரிவின் 5 விரிவுரையாளர்களுக்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கிய ரூபா 1,084,145 ஆராய்ச்சிப் படிக்குரிய ஆராய்ச்சி அறிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 05 விரிவுரையாளர்களில் இருவர் 2014 செப்டெம்பர் 30 ஆந் திகதி முதல் ஓய்வு பெற்றிருந்தனர். மேலும் இருவர் கல்விசார் பணிகளுக்காக வெளிநாடு சென்றிருந்தனர்.

(இ) 2014 ஆம் ஆண்டு முடிவில் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த மாணவர் உதவு தொகைக் கணக்கின் மீதியாகிய ரூபா 8,602,050 மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 11,836,350 வரை 37 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அத்தொகையை வைத்திருப்பதற்கான காரணம் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்படவில்லை.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடத்துக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான மாதிரிகளுக்கு அமைய BTU 24000 இயலளவு உள்ள 04 குளிரூட்டிகளை வழங்கி அவற்றை பொருத்துவதற்கு பதிலாக BTU 23500 இயலளவு கொண்ட 04 இயந்திரங்கள் வழங்கப்பட்டு 03 இடங்களில் பொருத்தப்பட்டுள்ள போது குறித்த இயலளவைக் கவனத்திற் கொள்ளாது ஒவ்வொன்றும் ரூபா 97,500 ஆக ரூபா 390,000 கூட்டுத்தொகை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் 2014 மற்றும் 2015 ஆகிய இரு ஆண்டுகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சுழற்சி முறையில் பெறுமதி சேர் வரியைச் செலுத்தியிராத 04 நிறுவனங்களுக்கு ரூபா 2,742,362 மற்றும் போலியான பெறுமதி சேர் வரி பட்டியல்களை சமர்பித்த 2 நிறுவனங்களுக்கு ரூபா 789,792 என பெறுமதி சேர் வரியைக் கொடுப்பனவு செய்திருந்தது. மீளாய்வாண்டு முடிவு வரை அந் நிறுவனங்களிடமிருந்து அவற்றைப் மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ‘‘இருபத்தியோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி’’ செயற்திட்டம் (HETC) மற்றும் றுஹுணு பல்கலைக்கழகம் என்பவற்றுக்கிடையே வெளிவாரிப் பட்டப் படிப்பு எனும் நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டம் 2016 சனவரி 23 ஆந் திகதியன்று முடிவடையவிருந்தது. அதற்கான செலவின முன்மொழிவு வினைத்திறனுடன் சமர்ப்பிக்காமையால் செயற்திட்டத்திற்கெனப் கிடைத்திருந்த ரூபா 25,000,000 நிதியேற்பாட்டில் ரூபா 12,155,374 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) றுஹுணு பல்கலைக்கழகம் மற்றும் பெல்ஜியம் VRIJE பல்கலைக்கழகம் என்பவற்றுக்கிடையேயான உடன்படிக்கையின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டு காலப்பகுதியில் பசுமைத் தடை (Green Dyke) செயற்திட்டத்தை அமுலாக்குவதற்காக ரூபா 22,840,222 தொகை வழங்கப்பட்டிருந்தது. குறித்த காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடையாதலால் பயன்படுத்தப்படாத ரூபா 9,293,549 VRIJE பல்கலைக்கழகத்திற்கு 2016 பெப்ரவரி 24 ஆந் திகதியன்று திருப்பி அனுப்ப நேர்ந்திருந்தது.

(இ) நீண்டகால முதலீட்டின் கீழ் காணப்படும் அபிவிருத்தி நிதியம், நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ரூபா 1,642,389 மீதியை அபிவிருத்தி நிதியத்தின் நோக்கத்திற்குப் பயன்படுத்தாமல் நீண்ட காலமாக செயற்பாடற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 10 பரிசு மற்றும் நன்கொடைக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 50,593,597 கூட்டுத்தொகையான பணம் 3 முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் நோக்கத்திற்குரிய பணிகளில் பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(உ) மூலதனச் செலவினத்திற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூலதன மானியம் குறித்த பணிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை எனவும் அத்தொகை பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு முடிவில் அவ்வாறாகப் பயன்படுத்தப்படாதிருந்த அரசாங்க மானியத்தின் அளவு ரூபா 102,648,284 ஆகும்.

(ஊ) வருமானக் கணக்கிலிருந்து தொலைக் கல்வி மற்றும் தொடர் கல்விக் கூறுக் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்பட்ட ரூபா 47,115,612 கூட்டுத்தொகையானது 3 ஆண்டுகளாக நிதியத்தின் நோக்கத்திற்குச் செலவிடப்படாது முன்கொண்டு செல்லப்பட்டவாறிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளின் போது வருமானக் கணக்கிலிருந்து இக் கணக்கிற்கு எந்தத் தொகையும் மாற்றஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மானிட சாஸ்திரம் மற்றும் சமூகவியல் விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளர்களுக்கு ரூபா 527,520 செலவில் வழங்கப்பட்ட 4 மடி கனணிகள் கமத்தொழில் பொறியியல் கல்விப் பரிவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,249,500 பெறுமதியான லேத் இயந்திரம் (lathe machine) மற்றும் மகாப்புர பல்விடயக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு வழங்கப்ட்ட ரூபா 1,162,500 பெறுமதியான 15 கணணிகள் என்பன 2015 ஒக்டோபர் 26 ஆந் திகதியளவில் உத்தரவாதக் காலம் கடந்து ஏறக்குறைய 2 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலாளரால் ஒப்படைக்கப்பட்ட றுஹுண பல்கலைக்கழகத்துடன் இணைந்த மாகாம்புர பல் விடயக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் குளிருட்டப்பட்டதும் தரை ஓடுகள் பதிக்கப்பட்டதுமான 5944 சதுர அடி அளவிலான அழகான கட்டிடத் தொகுதி எதுவித பயனுள்ள பணிக்கும் உபயோகிக்கப்படாது மூடப்பட்டிருந்தது.

(இ) கொஸ்பெலவத்த பதவியணியினர் உத்தியோகபூர்வ மனைத் தொகுதியில் ரூபா 3,622,242 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நிலையம் 2014 ஒக்டோபர் மாதம் முதல் எதுவித பயனுமின்றி மூடப்பட்டிருந்தது.

(ஈ) பொறியியல் பீடத்தின் இலத்திரனியல் மற்றம் தகவல் பிரிவின் கணணிக் கூறுக்கு 2014 நவம்பர் 04 ஆந் திகதியன்று தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து ரூபா 463,000 செலவில் 60 கணணி மேசைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இம் மேசைகளில் 47 பயன்படுத்தப்படாது கணணிக் கூறுக்குப் பிரவேசிக்கும் இடத்தில் பாதுகாப்பின்றி அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே, அக்கூறுக்கென நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த கேட்போர், கட்புல கூடம் 2016 சனவரி வரையிலும் நிர்மாணிக்காமையால் அதற்கென 2015 ஏப்ரல் 08 ஆந் திகதியன்று கல்விப் பிரிவில் பெறப்பட்டிருந்த ரூபா 5,645,536 பெறுமதியான உபகரணங்கள் 2016 சனவரி 28 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உயர் கல்விக் பாடநெறிகளை தொடர்வதற்காக 04 விரிவுரையாளர்களுக்கு ரூபா 11,341,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவர்களது கல்விசார் விடுமுறைக்காலம் 2015 ஒக்டோபர் 01 ஆந் திகதி முடிவுற்றிருந்தபோதும், 2016 பெப்ரவரி 19 ஆந் திகதியளவிலும் தமது உயர் கல்வி கற்கை நெறிக்குக்குரிய ஆய்வுக் கட்டுரைகளை அவர்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 4.8 இனங்காணப்பட்ட இழப்புகள்

தேவைகளை முறைப்படி இனங்காணாது இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்தமையால் 31 இரசாயனப் பொருட்களுடன் தொடர்புடைய ரூபா 380,117 கையிருப்பு மீளாய்வாண்டு முடிவில் காலாவதியாகியிருந்தது. அவ்வாறே, ரூபா 313,363 பெறுமதியான 23 இரசாயனப் பொருட்கள், பெறுமதி புலனாகாதிருந்த 231 கிலோ கிறாம் எடையுடைய 8 இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய 20 லீட்டர் இரசாயனப் பொருட்கள் என்பன 01

முதல் 06 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை இரு கல்விசார் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் மூலம் புலனாகியது.

**4.9 ஒப்பந்த நடைமுறைகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 நவெம்பர் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய 8 வேலைகளில் 4 வேலைகளது பௌதிக முன்னேற்றம் 15 முதல் 50 சதவீத மட்டத்திலிருந்ததுடன், மற்றுமோர் வேலையினது பௌதிக முன்னேற்றத்தின் பெறுமதி பூச்சியமாக இருந்தது. இந்த 8 வேலைகளுக்குமென ஆண்டின்போது பெறப்பட்ட ரூபா 283,000,000 நிதியேற்பாட்டில் 2015 நவெம்பர் 20 ஆந் திகதியளவில் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 95,550,000 மாத்திரமே ஆகும். அதற்கமைய, வேலைகளது நிதிசார் முன்னேற்றம் 34 சதவீதம் வரையிலான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ மற்றும் நிதிசார் பீடத்திற்கென நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. கட்டிடத் தொகுதியில் நிர்மாண வேலைகள் 2014 திசெம்பர் 17 இல் உள்ளவாறு முடிவுக்குவர வேண்டியபோதும், 2015 நவெம்பர் 20 ஆந் திகதியளவில் அந்நிர்மாண வேலைகளது பௌதிக முன்னேற்றம் 68 சதவீதமாக இருந்தது. நிர்மாண நடவடிக்கைகளது தாமதம் சம்பந்தமாக ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 12,970,908 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதும், பின்னர் ஒப்பந்த வேலைக் காலம் நீடிக்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு அறவிடப்பட்டிருந்த தொகை மீண்டும் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**4.10 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

---

பொறியியல் பீடத்தின் இலத்திரனியல் மற்றும் தகவல் கல்விப் பிரிவில் உள்ள கணனிக் அலகினை நவீனமயப்படுத்துவதற்காக 2015 சனவரி 05 ஆந் திகதி தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருடன் ரூபா 3,346,168 பெறுமதியான உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. வேலையின் ஒரு பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டு 2015 செப்டம்பர் 17 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரர் வேலையைக் கைவிட்டிருந்தார்.

**4.11 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கல்விசார் பதவியணி**

---

பொறியியல் பீடத்தில் அங்கீகரிக்கப்பட்ட 05 விரிவுரையாளர் பதவிகளும் வெற்றிடமாக இருந்தன. 07 பீடங்களில் 148 விரிவுரையாளர்களது பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. அதில் மருத்துவ, பொறியியல் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பீடங்களில் வெற்றிடங்கள் முறையே 41, 34, 23 எனும் உயரளவில் இருந்தமையானது அப்பீடங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பயனுள்ள கல்வியைப் பெறுவதற்குத் தடையாக அமைந்திருந்தது.

**(ஆ) கல்விசாராப் பதவியணியினர்**

---

(i) கல்விசாராப் பதவியணியில் 13 நிறைவேற்றுத்தரப் பதவிகளும் நிறைவேற்று தரத்திலல்லாத 50 பதவிகளும் சிற்றூழியர் தரத்திரலான 104 பதவிகளும் வெற்றிடமாக இருந்தன.

(ii) திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளுக்கிடையே இடமாற்றம் சம்பந்தமான நடைமுறை அமுலாக்கப்படாமையால் மருத்துவ பீடத்தின் பல்வேறு திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளுக்குரிய எழுதுவினைஞர் மற்றும் அதற்குச் சமமான சேவைகளுக்குரிய பதவிகளில் உள்ள 26 உத்தியோகத்தர்கள் 05 முதல் 32 ஆண்டுகாலமாக ஒரே பிரிவில் கடமையாற்றி வருவது அவதானிக்கப்பட்டது.

(iii) கமத்தொழில் விஞ்ஞான பீடத்தில் உணவு மற்றும் தொழில்நுட்பக் கல்விப் பிரிவில் இணைக்கப்பட்டிருந்த பெண் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் 2013 ஒக்டோபர் 28 முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவி இல்லாத அப்பீடத்தில் கணனிக் கூறில் இணைக்கப்பட்டமையால் கல்விப் பிரிவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அப்பிரிவில் உள்ள தொழிலாளி ஒருவர் பணியிலமர்த்தப்பட்டிருந்தார். அதன் காரணமாக, கல்விப் பிரிவில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக செயல்முறைப் பரீட்சைகளுக்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரது தரமான சேவையை பெற முடியாது போயிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை.

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடி/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒருமுறையாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினது கூட்டம் நடாத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் 02 கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்தன.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 15 முதல் 193 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 5.4 வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தல்

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகள் இரண்டினதும் வருடாந்த அறிக்கைகள் 2016 ஏப்ரல் 15 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

### 5.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், பின்வரும் விபரமடங்கிய கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாகப் பல்கலைக்கழகம் போதியளவு கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(அ) (i) கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல் தொழில்நுட்பப் பீடத்தினால் 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை அமுலாக்கப்பட்ட Specific Agreement on Research Co-operation Between the Swedish International Development Co-operation Agency செயற்திட்டத்தின் கீழ் உயர் கல்வித் தகைமையைப்

பூரணப்படுத்துவதற்காகத் தற்காலிக விரிவுரையாளர் ஒருவருக்கும் நிரந்தர விரிவுரையாளர் ஒருவருக்கும் எதுவித பிணை முறியுமின்றி ரூபா 1,740,622 நிதி உதவியாக வழங்கப்பட்டிருந்தது.

(ii) அவ்விரு விரிவுரையாளர்களும் தற்போது பல்கலைக்கழகத்தில் பணியாற்றாததுடன், உயர் கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்ததை உறுதிப்படுத்தும் சான்றெதுவும் இருக்கவில்லை. அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு எதுவித பிரதிபலனையும் பல்கலைக்கழகம் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கமத்தொழில் விஞ்ஞான பீடத்தின் உணவு மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானக் கல்விப்பிரிவிற்குத் தேவையான விஞ்ஞான உபகரணங்கள் ஜேர்மனியில் உள்ள நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதற்காக 4 ஆண்டுகளுக்கு முன்பு ரூபா 751,463 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. குறித்த உபகரணங்கள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருக்காததுடன், எனினும், அது தொடர்பாக 2014 மார்ச் வரை பின்தொடர் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) மீன் கல்விக்குத் தேவையான உபகரணங்களை இந்திய நிறுவனம் ஒன்றிடமிருந்து ரூபா 329,179 செலவில் இறக்குமதி செய்திருந்ததுடன், கட்டளைகள் வழங்கப்படாத உபகரணங்களும் அந்நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தன. மற்றுமொரு பகுதி கிடைக்கவில்லை. பல்வேறு குறைபாடுகளுடனான உபகரணங்கள் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அது தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 5.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுதல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் 8 சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் சுத்திகரிப்புச் சேவையை மேற்கொள்ளும் நிறுவனத்தால் அகற்றப்படும் திண்மக் கழிவுகளை உள்ளடக்கிய பல வகைக் கழிவுகள் வெல்லமடவ பாலத்திற்கு அண்மையில் உள்ள குடாவில் அகற்றப்பட்டிருந்தன. பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகியதன் காரணமாக அவ்விடத்தில் கழிவுகளை அகற்றுதல் 2016 மே 30 ஆந் திகதிக்குப் பின்னர் தடைசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனை காரணமாக ஏற்படும் நேரடி மற்றம் நேரடியல்லாத சுகாதார, சுற்றாடல் மற்றும் சமூகவியல் தாக்கல்களைக் குறைப்பதற்காக அரச நிறுவனங்களை இணைத்தவாறு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்க இயலுமாயினும், அது தொடர்பாகப் போதிய கவனஞ் செலுத்தப்படவில்லை.

(இ) தற்போது தடைசெய்யப்பட்டுள்ள மைக்ரோ 20 க்கும் குறைவான பொலித்தீன் பைகள் மற்றும் உணவைப் பொதியிலடைக்கும் தாள்கள் பல்கலைக்கழகத்தினுள் தடைசெய்தல், 20 மைரோக்களுக்குக் கூடிய பொலித்தீன், ஏனைய பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் கொள்கலன்களை கொண்டு வருவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீனுக்குப் பதிலாக ஏனைய பொதியிலடைத்தல் முறையைப் பயன்படுத்துவதற்குப் பதவியணியினரையும் மாணவர்களையும் ஊக்குவித்தல் போன்ற சுற்றாடல் சார்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவது தொடர்பாகப் பல்கலைக்கழகத்தினால் கவனஞ் செலுத்தப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணாமை, பயனற்றிருக்கும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | கணக்கீடு | கையிருப்பு மற்றும் உற்பத்தி முடிவடைந்த சொத்துக்களை இனங்கண்டு அவற்றைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | நிதிக்கட்டுப்பாடு | இலக்கிடப்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்குகளில் பணத்தை வைத்திருத்தல். |
| (ஈ) | பதவிணயியினர் நிர்வாகம் | வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்காமை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த நடவடிக்கைகள் சம்பந்தமாகச் சிறந்த மேற்பார்வையொன்று இடம்பெறாமை |
| (ஊ) | வாகனக் கட்டுப்பாடு | வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, நாளாந்த ஓட்ட அட்டவணைகளையும் மாதாந்தப் பொழிப்புகளையும் பூர்த்தி செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை. |
| (எ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றாமை மற்றும் திட்டங்களைத் தயாரித்து அமுலாக்குவதில் வினைத்திறமையின்மை ஆகியன இடம் பெற்றிருத்தல். |